**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 110/2021**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய **தர்மராஜன் PW.2** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.02.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : தர்மராஜன் | | |
| Father Name | : ராஜகோபால் | Court | : |
| Village | : தில்லையாடி | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 64 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வாசாஆ 1 ஆன ஆவணத்தை நான் தான் எழுதினேன். அதில் முதல் சாட்சியாக நான் கையெழுத்து போட்டுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த முதல் சாட்சி கையொப்பம் மட்டும் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வாசாஆ 1 ல் உள்ள 15.04.2015 தேதியிட்ட வரவு குறிப்பினை எழுதி, எழுதியது உட்பட அறிவேன் என குறிப்பிட்டு கையொப்பம் போட்டுள்ளேன். **அந்த கையொப்பம் மட்டும் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாசாஆ 2 ல் முதல் சாட்சியாக நான் கையெழுத்து செய்துள்ளேன். **அந்த கையொப்பம் மட்டும் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதிக்கு ஆதரவாக தீர்ப்பா வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.